## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்

வா.சா.1 – சிவக்குமார் OS.No.108 /2024 நாள் : 19.11.2025

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது சொந்த ஊர் அரியலூர் ஆகும். நான் Finance தொழில் செய்து வருகிறேன். Finance தொழில் செய்வதற்கு அரசிடம் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் மாநில அரசிடம் உரிமம் பெற்றுள்ளேன். அந்த உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்திலோ, பிராதுவிலோ மாநில அரசிடம் உரிமம் பெற்று பினான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் அதன் முகவரி குறித்து தாவாவிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எனது Finance அலுவலகத்திற்கு பெயர் வைத்துள்ளனா என்றால் Vinayaga Money Lender என்று பெயர் வைத்துள்ளேன். மேலும் அந்த நிறுவனத்திற்கு உரிமையாளர் , மேலாளர் யார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்கண்ட நிறுவனத்தில்தான் பிரதிவாதி கடன் வாங்கியுள்ளதாக பிராதுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஆமாம். பிரதிவாதியும், எனது மனைவியும் ஒரே இடத்தில் வேலை பார்த்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது அலுவலகம் வேறு, வீடு வேறு என்றால் சரிதான். எனது மனைவி மூலமாகதான் பிரதிவாதி அறிமுகமானார் என்றால் சரிதான். எனது நிறுவனத்திற்கு சில விதிமுறைகளின் படியும், சில ஆவணங்களின்படியும்தான் கடன் வழங்குவோம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்திற்கென்று கணக்குவழக்குகள், பதிவேடுகள் பராமரிக்கப்படுகிறது

என்றால் சரிதான். வருமான வரி எனக்கு தனியாகவும், நிறுவனத்திற்கு தனியாகவும் கட்டி வருகிறேனா என்றால் ஆமாம். எங்கள் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதால் கடன் வாங்குபவர்களுக்கு பதிவு செய்துதான் கடன் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். நாங்கள் பதிவு செய்வது சார்பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக புரோநோட் பதிவு செய்து கொடுக்கப்படுமா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில்தான் பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன. நாங்கள் பதிவேடுகள் பராமரிக்க எங்கள் அலுவலகத்தில் பணியாளர்கள் உள்ளார்களா என்றால் இல்லை. எங்கள் நிதிநிறுவனத்தை எந்த சட்டத்தின்படி பதிவு செய்து உரிமம் பெற்றுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை, உரிமம் பெறுவதற்காக விண்ணப்பித்து உரிமம் பெற்றேன். மாநில அரசின் எந்த துறையில் உரிமம் பெற விண்ணப்பித்தேன் என்றால் வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்து உரிமம் பெற்றேன். பிரதிவாதி கடன் வாங்கியதற்கு புரோநோட் எழுதுவதற்கு எத்தனை வருடங்களுக்கு முன்பாக பணம் கொடுத்தேன் என்றால் புரோநோட் எழுதிய அன்றுதான் பணம் கொடுத்தேன். வட்டி எவ்வளவு என்றால் ஒருவட்டி ஆகும். எனது Finance நிறுவனம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் இப்போதிலிருந்து 2 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. எனது மனைவிதான் தனது உடன் பணிபுரிபவர் என்று சிபாரிசு செய்ததன்பேரில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும்போது மொத்தமாக கொடுத்தேனா அல்லது பகுதி, பகுதியாக கொடுத்தேனா என்றால் மொத்தமாகதான் கொடுத்தேன். நான் மொத்தமாக பணம் கொடுத்தது பற்றி எனது வருமான வரி ஆண்டு (Incom Tax Assesment Year) கணக்கிற்கு தெரிவித்துள்ளேனா

என்றால் நான் Finance தொடங்கும்போதே 30 லட்சம் வரை வரவு செலவு செய்வேன் என்று சொல்லி உரிமம் பெற்றதால் தனிப்பட்ட முறையில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தது குறித்து வருமான வரி கணக்கில் தெரிவிக்கவில்லை. எனது வருமான வரி கணக்கில் எனது கையிருப்பு தொகை எவ்வளவு இருக்கிறது என்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2021 ம் ஆண்டு பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்பட்டபோது 2020,2021,2022 ஆகிய நிதியாண்டுகளுக்கு உரிய வருமான கணக்கில் எனது கையிருப்பு எவ்வளவு என்பது குறித்து தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிராது, பிரமாண வாக்குமூலம் எதிலும் நான் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறேன் என்றும், என்னிடம் எவ்வளவு கையிருப்பு இருந்தது என்பது குறித்தும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மனைவி பிரதிவாதியுடன் பணிபுரிந்தார் என்பதாலும், அவரது பரிந்துரையின்பேரில்தான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததாலும் எனது மனைவியை சாட்சியாக இருக்க வேண்டி புரோநோட்டில் சாட்சி கையொப்பம் பெற்றேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் எழுதப்பட்ட வாசகங்கள் ஒரு மையிலும், கையொப்பம் ஒரு மையிலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடன் தொகை பெரிய தொகை என்பதால் பிரதிவாதியிடம் சொத்துக்கள் எதுவும் இருக்கிறதா என்றும், பிரதிவாதி தரப்பில் சாட்சிக்கு ஆட்கள் வரவழைக்க வேண்டும் என்பது குறித்து கேட்டுக்கொண்டேனா என்றால் இல்லை, எனது மனைவியுடன் பிரதிவாதி நீண்ட நாட்களாக பணிபுரிந்தவர் என்பதாலும், எனது நண்பர் என்பதாலும், அவர் அரசு வேலையில் இருப்பதாலும், ஒரு லட்சம் ரூபாய் சம்பளம் வாங்குபவர் என்பதாலும் கேட்கவில்லை. நான்

மேற்சொன்ன விவரங்கள் குறித்து புரோநோட்டிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ, தாவாவிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிராதுவில் பிரதிவாதி அவரது நிலத்திற்கு போர் போடவேண்டும், நிலத்தில் பயிர் வைக்க வேண்டும், பிள்ளைகளுக்கு பள்ளியில் பணம் செலுத்த வேண்டும் என்று சொல்லி என்னிடம் கடன் வாங்கினார். நான் சொல்வது அனைத்தும் பொய் என்றாலும், நான் சொல்வதுபோல் பிரதிவாதி எந்த தொகையையும் நான் மேற்சொன்ன காரணங்களுக்காக என்னிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்த ஊர் எது என்றால் அவர் அரியலூரில் குடியிருந்தார் ஆகையினால் அவரது சொந்த ஊர் எதுவென்று எனக்கு தெரியவில்லை. எனது மனைவியுடன் வேலை செய்பவர் என்பதாலும், அதன் மூலம் எனக்கு பழக்கம் என்பதாலும், பிரதிவாதி எனது நண்பர் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பிரதிவாதிக்கு விவசாய நிலங்கள் எதுவும் சொந்தமாக இல்லை என்றும், அவரது பிள்ளைகளுக்கு கல்வி கட்டணம் கட்டுவது போன்ற தேவையும் கிடையாது என்றாலும், அவருக்கு ஒரே மகன்தான் அவருக்கும் 7 வயதே ஆகிறது என்றும், அவர் ராமகிருஷ்ணா பள்ளியில் படிக்கிறார் என்றும், அவரது பள்ளிக்கட்டணத்தை கட்டுவதற்கு போதுமான அரசு வருவாய் அவரிடம் உள்ளது என்பதாலும், அவர் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அரசு ஊழியர் என்பதாலும் அவருக்கு குடியிருப்பு வாரியத்தில் வீடு இருப்பதாலும் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்க வேண்டிய எந்த அவசியமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கிய தொகை ரூபாய் 3 லட்சம் என்றாலும் அந்த தொகைக்கு மாதம் ரூபாய் 6000 வட்டி கொடுத்துவந்தார் என்றும், எனக்கும்,

பிரதிவாதிக்கும் ஏற்பட்ட மனக்கசப்பின்காரணமாக கொஞ்சகாலம் அவர் எனக்கு வட்டி கொடுக்க முடியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நாளன்று என்ன கிழமை என்றால் கிழமை தெரியவில்லை, தேதிதான் தெரியும். புரோநோட்டில் கண்டுள்ள தொகையை பிரதிவாதி வாங்கவில்லை என்றும், அதில் குறிப்பிட்டுள்ள சாட்சிகள் தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த அறிவிப்பில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது).

ஒப்பம்.திருமதி.M.S.மணிமேகலை,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.